நகராட்சி அலுவலகம்
அம்பாசமுத்திரம்
நாள்.27.11.2020

**சாதாரணக்கூட்டம்**

அம்பாசமுத்திரம் நகர் மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2020ம் வருடம் நவம்பர் மாதம் 27ம் தேதி (27.11.2020) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு தனி அதிகாரி அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

தனி அலுவலர்/ஆணையாளர்(பொ)
அம்பாசமுத்திரம் நகராட்சி

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 27.11.20 | 794 | **பொருள் எண்: 1**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் நடைபெற்றுவரும் திட்டப்பணிகளை தினச்சூரியன் நாளிதழில் வெளியிட மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க. எண்.82/செ.ம.தொ/2020, நாள்.12.08.2020ன்படி 2018–19 மற்றும் 2019–20ல் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை தினச்சூரியன் பத்திரிக்கையில் வெளியிட்டமைக்கு தினச்சூரியன் நாளிதழின் பில் எண்.489, நாள்.25.10.2020ன்படி ரூ.9975/– மட்டும் வழங்கிடவும், அதற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்காக.<br>(ந.க.எண்.1218/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 27.11.20 | 795 | **பொருள் எண்: 2**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் 2018–19 மற்றும் 2019–20 காலங்களில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தினை தமிழ்சுடர் நாளிதழில் வெளியிட மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க. எண்.77/செமதொ/செ/2020, நாள்.12.08.2020ன்படி தமிழ் நாளிதழில் விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டதற்கு தமிழ்சுடர் நாளிதழ் நிறுவனத்தின் பட்டியல் தொகை ரூ.7000/– மட்டும் வழங்கிடவும், அதற்கான செலவினத் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்காக.<br>(ந.க. எண்.1218/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 27.11.20 | 796 | **பொருள் எண்: 3**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் 2018–19 மற்றும் 2019–20களில் நடைபெற்ற திட்டப்பணிகளை தினத்தந்தி நாளிதழில் பத்திரிக்கை செய்தியாக வெளியிட வேண்டி திருநெல்வேலி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.83/செமதொ/செ/2020, நாள்.17.08.2020ன்படி தினத்தந்தி நாளிதழில் 22.10.2020 அன்று பிரசுரம் செய்யப்பட்டது. அவ்விளம்பரம் வெளியிட்டமைக்கு தினத்தந்தி நிறுவனத்தின் பில் எண். TVL2020/0006698, நாள்.22.10.2020ன்படி ரூ.23,688/– மட்டும் வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்காக.<br>(ந.க. எண்.1218/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 27.11.20 | 797 | **பொருள் எண்: 4**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் 2018–19 மற்றும் 2019–20களில் நடைபெற்ற திட்டப்பணிகளை தமிழக நியூஸ் நாளிதழில் பத்திரிக்கை செய்தியாக வெளியிட வேண்டி திருநெல்வேலி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.80/செமதொ/செ/2020, நாள்.20.08.2020ன்படி தமிழக நியூஸ் தினசரி நாளிதழில் விளம்பரம் பிரசுரம் செய்திட கேட்டதின்பேரில் 25.10.2020 அன்று தமிழக நியூஸ் நாளிதழில் விளம்பரம் வெளியிடப்பட்டது. அந்நிறுவனத்தின் பட்டியல் தொகை ரூ.9500/– பில் நம்பர்.1026, நாள்.25.10.2020ன்படி வழங்கிடவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்காக. | அனுமதிக்கப் பட்டது |
| 27.11.20 | 798 | **பொருள் எண்: 5**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆணையாளர் அவர்களின் அறை மிகவும் சிறியதாக உள்ளதாலும், கழிப்பறை மிக மிக சிறியதாக உள்ளதாலும், ஆணையாளர் அறையினை விஸ்துரணம் செய்து மேம்பாசடு செய்யும் பணியினை தேர்வு செய்தும், அப்பணிக்கு நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3,75,000/– மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். மேற்காண் பணியினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக.<br>(ந.க. எண்.1767/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| 27.11.20 | 799 | **பொருள் எண்: 6**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் ஆணையாளர் அவர்கள் காணொளி காட்சி மூலம் கூட்டங்களில் பங்கு பெற வேண்டி உள்ளதாலும், அலுவலக பணிகள் மேற்கொள்ளவும் ஆணையாளர் அறைக்கு கணினி 1 எண்ணம் மற்றும் பிரிண்டர் 1 எண்ணம் சப்ளை செய்த வகைக்கு Suresh Systems, Sankarankoil நிறுவனத்தாரின் பில் எண்.2020–21 / P / 00101ன்படி தொகை ரூ.1,14,590/–ஐ வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக. | அனுமதிக்கப் பட்டது |